**https://arimanokku.com/** UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
**ISSN: 2320-4842 (Print)** **ISSN: 3049-2688 (Online)**

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)

19-2 April 2025

**Published on 14, April-2025** **ISSN: 3049-2688 (Online)**

# வதனமார் வழிபாடு: இலங்கை - கிழக்கு மாகாணத்தில் மேய்ச்சல் சமூகம் பற்றிய விசாரணை

**கலைமகள் கிருஷ்ணமூர்த்தி**
முனைவர்பட்ட ஆய்வாளர்
நாட்டார் வழக்காற்றியல் துறை ஆய்வு மையம்
தூய சவேரியார் கல்லூரி (தன்னாட்சி)
பாளையங்கோட்டை, திருநெல்வேலி

*முன்னுரை*

*இலங்கையில் மாரியம்மன், கண்ணகையம்மன், வைரவர், காத்தவராயன், திரௌபதை அம்மன்; போன்ற நாட்டார் தெய்வங்கள் பரவலாக வழிபடப்பட்டு வருகின்றன. இவை தவிர வேறு சில தெய்வங்களும் வழிபடப்படுகின்றன. எடுத்துக்காட்டாக நீலி, வதனமார்கள், சுவாதியம்மன் போன்ற தெய்வங்களாகும். இவற்றில் வதனமார் கால்நடை வளர்ப்புடன் தொடர்புடைய ஒரு தெய்வக் குழுமம் ஆகும். இதில் சுவாதியம்மன் வதனமாருக்கு அருள்கொடுக்கும் தெய்வமாக விளங்குகின்றது. அதனால் இவ்விருதெய்வங்களும் ஒன்றாகவே வழிபடப்படுகின்றன. வதனமார் வழிபாடு கிழக்கு மாகாணத்தில் வெல்லாவெளி, பாசிக்குடா, போரதீவு, கதிரவெளி, மூதூர் போன்ற பகுதிகளில் காணப்படுகின்றது. இவற்றில் போரதீவிலும் மூதூரிலும் தனித்த வழிபாடாக இடம்பெறுகின்றது. ஏனைய பகுதிகளான வெல்லாவெளி, கதிரவெளி போன்ற கிராமங்களில் மாரியம்மன் வழிபாட்டுச் சடங்குகளின் ஒரு பகுதியாக நிகழ்த்தப்படுகின்றது.*

*ஈழத்துப்பூரடனார் எழுதிய வதனமார் வழிபாடு ஓர் மதிப்பீடு என்னும் நூலில் வதனமார் தோற்றப் பாடல்கள், வதனமார் ஊர்சுற்றுக்காவியம், வதனமார் தேனெடுக்கும் காவியம், வதனமார் குழுமாட்டுக் காவியம் போன்ற பாடல்களின் தொகுப்புக்கள் இடம்பெற்றுள்ளன. இந்நூலானது மட்டக்களப்பில் வழக்கிலுள்ள வதனமார் வழிபாடு தொடர்பான முக்கிய நூலாக அமைகின்றது. ஈழத்துப்பூரடனார் இந்நூலில் வதனமார் பற்றிய தகவல்களை வாய்மொழித் தகவல்களிருந்தும் ஏடுகளிலிருந்தும் சேர்த்துத் தொகுத்துள்ளார். அத்துடன் 1970களில் பட்டிகளுக்குச் சென்று அங்கு வாழ்ந்த பட்டிக்காரரர்கள் பற்றியும் தகவல்களைச் சேகரித்துள்ளார். வதனமார் குழுமாட்டுக்காவியம் என்பதில் வதனமார் நாதனையில் நகரமைத்து குழுமாடு பிடித்ததாகக் கூறப்படுகின்றது. குழுமாடு என்பது காடுகளில் அலைந்து திரியும் காட்டுமாடு. வதனமார் தேனெடுக்கும் காவியத்தில் இரண்டு பகுதிகள் உள்ளன. அவை: மூதாதையரை வழிபடும் பாடல், தேனெடுக்கும் பாடல். இந்நூலிலுள்ள எல்லாப்பாடல்களும் இறைவணக்கம், காப்பு, மங்களம் போன்ற அமைப்பினைக் கொண்டவை. பெரும்பாலும் காப்புப்பாடல்களில் பிள்ளையார் வணக்கம் இடம் பெறுகின்றது. அதேவேளையில் பிள்ளையார் தவிர சிவன், திருமால், உமை போன்ற*

தெய்வங்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்நூலில் உள்ள பாடல் தொகுப்புக்கள் வதனமாரின் தோற்றவரலாறு, பரவல் போன்ற தகவல்களைக் கூறுகின்றன. அத்துடன் வதனமார்கள் வழிபாட்டின் நோக்கம், வழிபாட்டு முறைகள் குறித்தும் இக்காவியங்கள் விவரிக்கின்றன. இவை வதனமார்கள் பனிரெண்டு, நூற்றாறு, நூற்றறுபது போன்ற எண்ணிக்கையினைக் கொண்டவர்களாகக் குறிப்பிடுகின்றன. மேலும் இக்காவியத்தில் மங்கல வதனன், பாலவதனன், உற்றவதனன், தெளிவதனன், படுவதனன், திருப்பாற்கடல் வதனன், காக்காய் வதனன், ஆகாசவதனன், கந்துவத னன், மந்துவதனன், குழுவதனன், திருநீலவத னன், அக்கினி வதனன் போன்ற வதனமார் களின் பெயர்கள் குறிப்பிடப்படுகின்றன.

அத்துடன் வதனமாரினை வழிபடும் சமூக மாகப் பட்டிக்காரர்கள் இருந்துள்ளதனை இந்நூல் குறிப்பிடுகின்றது. இவர்கள் பொங்கலின் போது பட்டிகளில் பொங்கல் வைத்து வழிபட்டதனை ஈழத்துப்பூரடனார் குறிப்பிடுகின்றார். (ஈழத்துப்பூரடனார், 2000:33) சமகாலத்தில் வதனமார் வழிபாடு ஒருசில இடங்களில் மட்டும் வழிபடப்படுவதை அவதானிக்கலாம். பிற இடங்களில் மாரியம்மன் வழிபாட்டில் ஒரு பகுதியாக வழிபடப்படுகின்றது. மாரியம்மன் வழிபாட் டில் இடம்பெறும் போது பட்டிக்காரர்கள் என்ற சமூகங்களில்லை. எல்லாச்சமூகத்தின ரும் வழிபடும் தெய்வமாக வதனமார் மாறியுள்ளது.

இலங்கையில் ஆடு, மாடு மேய்க்கும் மேய்ச்சல் சமூகத்தினைச் சேர்ந்த சமூகத்தினர் தற்போது இல்லை. அல்லது மேய்ச்சலைப் பிரதானமாகக் கொண்ட சமூகங்களில்லை எனலாம். ஆனால் இந்த வழிபாடு தொடர் பான சடங்கு நிகழ்த்துகைகளும் பாடல்கள், காவியம், அகவல் போன்றவை வெளிப் படுத்தும் விபரணைகளும் ஒரு வளர்ச்சி அடைந்த மேய்ச்சல் சமூகத்தின் கூறுகளை வெளிப்படுத்துகின்றன. அவ்வகையில் இலங்கையில் மேய்ச்சல் சமூகத்தின் வகிபாகத்தைக் குறித்து ஆராய வேண்டிய தேவை ஏற்படுகின்றது. எனவே வதனமார் வழிபாடு குறித்து இந்த ஆய்வு இலங்கையில் மேய்ச்சல் சமூகம் பற்றிய விசாரணையாக வும் அமைகின்றது. இக்கட்டுரையின் முதற் பகுதி ஈழத்துப்பூரடனாரின் நூலினை முன் வைத்து வதனமார் குறித்த பதிவுகளையும் வதனமார் வழிபாட்டுடன் பட்டிக்காரர்களு க்குள்ள தொடர்பினையும் ஆராய முற் படுகின்றது. இரண்டாவது பகுதியில் தற் காலத்தில் வதனமார் வழிபாடு மட்டக் களப்புப் பகுதிகளிலும் திருகோணமலையி லும் நடைபெறும் முறைகளைப் பதிவு செய்கின்றது.

## வதனமார் குறித்த பாடல்களும் பட்டிக்காரர்களும்

வதனமார் குறித்த தோற்றக்கதைகளை அவர்களின் பிறப்புடன் தொடர்புடைய கதைகள், இலங்கையில் வதனமார் வருகை பரவல் குறித்த கதைகள், வதனமார் வழிபாடு தொடர்பான கதைகள் என வகைப்படுத்தலாம். வதனமார் யானைகட்டு அகவல் வதனமார்கள் தோற்றம் பற்றிக் குறிப்பிடுகின்றது. இக்கதையில் அயோத்தி யில் வதனமாரும் அவரது தலைவரான மங்கலனாரும் தோன்றியதாகக் குறிப்பிடப் படுகின்றது. அக்கதை வருமாறு:

சுவாதி அம்மனின் அருளினாலும் பரராச முனிவரின் உதவியுடன் பிராமணக்குலத்துப் பெண்ணான கனகமணி என்பவள் திரு மாலை நோக்கித் தவமிருக்கின்றாள். திரு மால் அவளுக்கு வரமாக ஒரு தாமரைப் பூவினைக் கொடுக்கின்றார். தாமரைப்பூவிலி ருந்து வதனமாருக்குத் துணைசெய்யும் மங்கலனார் உருவாகின்றார். மேலும் அவ்வரத்தின் பயனாகக் கனகமணி கர்ப் பந்தரித்து 106 வதனமார்களைப் பெற்றெ டுக்கின்றார். வதனமார்கள்; ஊர்சுற்ற ஆசைகொண்டு மங்கலனாரின் உதவியுடன் அயோத்தியிலிருந்து புறப்பட்டுத் தெற்கே மதுரையில் தங்கி இராமேஸ்வரம் வந்தனர். அங்கிருந்து கந்தமாபர்வதம் என அழைக்கப்படும் திருகோணமலைக்கு வந்து, அங்கு தம்பலகாமத்தில் தங்கி, கந்தளாயில் நீராடி அங்கிருந்து கொட்டியாரம், கிளி வெட்டி ஊடாகத் தம்மன்கடவை சென்று தங்கியுள்ளனர். அங்குக் குழுமாடு, யானை, எருமை போன்ற வன விலங்குகளைப் பிடித்து அடக்குவதே இவர்களது பொழுது போக்காகவும் விளையாட்டாகவும் இருந்து ள்ளது. வதனமார்கள் இவ்விலங்குகளைப் பிடிப்பதற்காய் வில், அம்பு, வெளுக்கயிறு , பொல், மந்து, வெளுகண்டகோடாரி, கையம்பு, கிரிசவடி, தண்டம், வாள் போன்ற ஆயுதங்களைப் பயன்படுத்தினர்.

பின் திருக்கோயில், தம்பட்டை போன்ற இடங்களினூடாகக் கல்முனை வந்து தங்கி அங்கிருந்து மக்களுக்கு அருள் கொடுத்து ள்ளனர். பின் அங்கிருந்து கொக்கட்டுச் சோலை மணலப்பட்டிக்கு வந்து தங்கியுள்ள னர். இறுதியாக அவர்கள்

வில்லுக்குளத்தோரம் என்ற இடத்தில் தங்கியிருக்கும்போது காக்காய்வதனன் என்ற வதனமார் வெள்ளைக்கிடா ஒன்றிருப்பதாகத் தகவல் சொல்ல, எல்லோரும் மகிழ்ச்சியோடு சென்று கிடாவினை அடக்க முயன்றுள்ளனர். ஆனால் அந்தக் கிடாவினை அவர்களால் அடக்க முடியவில்லை. இதன்போது அதிக வதனமார்கள் இறந்துவிடுகின்றனர். இதனால் அவர்கள் சுவாதி அம்மனை வேண்டுகின்ற னர். சுவாதிஅம்மன் வெள்ளைக்கிடாவி னைப் பார்த்துக் கோபப்பட்டு வேதமந்திரங் கள் ஓத, கிடா இறந்துள்ளது. மேலும் சுவாதி அம்மன் தன் சக்தியினால் இறந்துவிட்ட பாலவதனமார்களை எழுப்பி 'நீங்கள் வெள்ளைக்கிடாவினை அடக்கத்தவறியதால் தேவலோகம் வரக்கூடாது; இங்கேயே தங்கி, பட்டிக்குப் பாலமிர்தம் உண்டுபண்ணி மக்களுக்கு உதவியாக இருங்கள்' எனக் கூறியுள்ளார் (மேலது.47)

இக்கதையில் வனவிலங்குகளைப் பிடித்து அடக்கும் குழுவினராக வதனமார்கள் காணப்பட்டுள்ளனர் இவர்கள் கூட்டமாக இடம்பெயர்ந்து வந்ததனையும் அவ்வாறு வரும்போது குறிப்பிட்ட இடங்களில் தங்கியு ள்ளதனையும் இப்பனுவல் விவரிக்கின்றது. அத்துடன் இலங்கையில் அவர்கள் நிரந்தர மாகத் தங்கியதற்கான காரணத்தினையும் குறிப்பிடுகின்றது. அதாவது கிடாவினை அடக்கத்தவறியதால் இங்கே தங்கிப் பட்டிகளைப் பாதுகாக்கும்படிச் சுவாதியம் மன் கூறியதாகக் குறிப்பிடுகின்றது.

இக்கதையைத்தவிர, திருகோணமலையில் அமைந்துள்ள சம்பூரில் வதனமார்கள் வழிபாடு பற்றி ஒரு வாய்மொழிக்கதை வழங்கப்படுகின்றது. அது பின்வருமாறு:

முன்னூற்றொரு வதனமார்கள் பயணம் செய்து குழுமாடுகளை அடக்கி வருகின்ற போது ஒரு வதனமார் காணாமல் போகின்றார். அவரைத் தேடிவருகின்ற வேளை அவர் ஒரு பாலைமரத்து உச்சியில் அமர்ந்து தேனெடுத்து உண்ணுவதனை ஏனைய வதனமார்கள் கண்டுபிடிக்கின்றனர். தேன் ருசிமேலிட்டு மரத்தில் உள்ள வதனமார் தேடிவந்தவர்களையும் மரத்தில் ஏறச் சொல்லுகின்றார். ஆனால் அவர்கள் திருப்பிச் செல்ல நாழியாவதால் அவரைக் கீழிறங்கும்படிக் கூறுகின்றனர். ஆனால் அவர் இறங்க மறுக்கவே கோபமடைந்த ஏனைய வதனமார்கள்; அவரை இங்கேயே இருக்கும்படியும் அவர் மரத்திலிருந்து இறங்க மறுத்ததனால் அவருக்கு மக்கள் அந்தரத்தில் மடை வைத்துத் திறந்து பார்க்காமல் பொங்கல் படைத்து வழிபாடுகள் செய்வார் கள் எனவும் கூறிவிட்டுச் சென்றனர்.

தற்போதும் அப்பகுதியில் வாழும் மக்கள் வதனமார் பாலைமரத்தில் வீற்றிருந்து பசு மாடுகளைக் காவல்காப்பதாக நம்புகின்றனர். அதன் அடிப்படையில் வழிபாட்டின்போது, மக்கள் காட்டில் உள்ள பாலைமரத்தில் சிறுபந்தல் அமைத்து நெய்ப்பந்தம் கொளுத்தி, மடைவைத்தும் பொங்கலிட்டும் வழிபட்டு வருகின்றார்கள்.

இதேபோல் வெல்லாவெளியில் உள்ள நாதனை என்னும் வயல்பகுதியிலும் வதனார் வழிபாடு நடைபெறுகின்றது. வதனமார் நாதனைக்கு வந்தது குறித்து ஊர்சுற்றுக் காவியம் குறிப்பிடுகின்றது. அவர்கள் வதனமார் திருகோணமலையை வந்தடைந்து பின் தெற்குநோக்கிச் செல்கின்றனர். பின்னர் நாதனைக்கு வந்ததனை "நாற்றிசைகள் புகழ்கின்ற நாதனைப் பதியில் நற்பதியென விருந்தார்" என்ற பாடல்வரி குறிப்பிடுகின் றது. வதனமார்கள் வன்னியமை ஆட்சிக் காலத்தில் காட்டில் வாழும் மாடுகளை அடக்கி வளர்ப்பு மாடுகளாகக் கொண்டு தங்களது பட்டிகளைப் பெருக்கி வந்துள்ள தாகவும் அதன் தொடர்ச்சியாய் நாதனை யில் பெருவிழா எடுக்கப்பட்டதாகவும் கூறுகின்றனர். இன்று நாதனையில் சுவாதி யம்மனுக்கும் வதனமாருக்கும் ஒருநாள்ச் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.

ஈழத்துப் பூரடனாரின் வதனமார் வழிபாடு என்னும் நூலில் மட்டக்களப்பில் வாழ்ந்த போடிமார்கள், பட்டிக்காரர்கள் பற்றிய குறிப்புக்களுள்ளன. மட்டக்களப்பிலுள்ள நிலச்சொந்தக்காரர்கள் போடிமார்கள் என அழைக்கப்பட்டுள்ளனர். அவர்களின் நிலத்தையும் கால்நடைகளையும் பாதுகாப் பவர்களாக, மேற்பார்வை செய்பவர்களாகப் பட்டிக்காரர்கள் இருந்துள்ளனர். இப்பட்டி கள் ஊரின் எல்லைப்பகுதியில் காட்டின் அருகே அமைக்கப்பட்டிருந்தன. இவ்விடம் கால்நடை வளர்ப்பிற்கு ஏற்றவகையில், மேய்ச்சலை அடிப்படையாகக்கொண்டு தெரிவு செய்யப்படுகின்றது. பொதுவாக, இவ்விடம் ஊர்களுக்கு அருகில் அமை யாமல் மிகத்தொலைவில் அமைகின்றது. பட்டிக்காரர்கள் காட்டின் எல்லையில் பட்டிகளை அண்டி வசித்து, அதனைப் பாதுகாத்து வந்துள்ளனர். இவர்கள் வயல் தொழிலுக்கு ஏற்றவகையில் மாடுகளைப் பழக்குதல், சூடுபோடுதல், கால்நடைகளைப் பாதுகாத்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டு வந்துள்ளனர். போடிமார்கள்

பட்டிக்காரர்களுக்கு ஊதியமாக விவசாய விளைச்சலில் குறிப்பிட்ட பகுதியையும், பட்டிகள் பெருகும்போது கால்நடைகளில் ஒரு பகுதியையும் வழங்கிவந்துள்ளனர். இத்தகைய வாழ்வியல் முறையில் பட்டி களின் பெருக்கம், பாதுகாப்பினை நோக்காகக் கொண்டு வதனமார் வழிபாடு வருடத்தில் ஒருமுறையும் மாடுகளுக்குக் குறிவைக்கும் காலங்களிலும் நிகழ்த்தப்பட்டு வந்துள்ளது.

மேலும் பட்டிக்காரர்களின் வாழ்வு பற்றி வதனமார் காவியம் குறிப்பிடுக்கின்றது. இக்காவியத்தில் விலங்குகளினால் ஏற்படும் ஆபத்துக்களிலிருந்தும் நோய்த்தொற்றுக்களி லிருந்தும் காக்கும்படி வேண்டப்படுகின்றது. அதாவது காட்டில் வாழும் தங்களைக் கொடிய மிருகங்களிடமிருந்தும் பெருமழையி லிருந்தும் கால்நடைகளைக் கவரவரும் கள்வர்களிடமிருந்தும் அம்மை போன்ற நோய்த் தொற்றுக்களிலிருந்தும் காக்க வேண்டுமெனக் குறிப்பிடுகின்றது. இருப்பி னும் பட்டிக்காரர்களின் முழுமையான வாழ்வுமுறையினைப் பற்றிய தகவல்களை அறியமுடியவில்லை.

## மட்டக்களப்பில் வதனமார்கள் வழிபாடு

வதனமார்கள் வழிபாடு மட்டக்களப்பு மாவட்டத்தில் இருவிதமாக நிகழ்த்தப் படு கின்றது. அவை: பட்டிகளில் நிகழ்த்தப்படும் வழிபாடு, கோயில்களில் நிகழ்த்தப்படும் வழி பாடு. பட்டிகளில் நிகழ்த்தப்படும் வழிபாடு தாந்தாமலை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலும் கோயில்களில் நிகழ்த்தப்படும் வழிபாடு வெல்லாவெளி, கதிரவெளி போன்ற பகுதிகளிலும் நிகழ்த்தப்படுகின்றன. பட்டி களில் நடைபெறும் வழிபாடு ஒரு நாள் சடங்காகவும் கோயில்களில் நிகழ்த்தப்படும் வழிபாடு வெல்லாவெளியிலுள்ள முத்து மாரியம்மன் கோயிலில் ஐந்தாம்நாள்ச் சடங்காகவும் கதிரவெளியில் ஆரம்ப நிகழ்வாகவும் நடத்தப்படுகின்றது.

## பட்டிகளில் வதனமார் வழிபாடு

பட்டிகள் காடுகளிலும் காட்டினை அண் மித்த பகுதிகளிலுமே அமைந்துள்ளன. பட்டிகளை அமைக்கும்போது மாடுகள் மேய்வதற்கான சூழலைக் கருத்தில் கொண்டே அமைக்கின்றனர். அப்பட்டி களில் வதனமார் வழிபாடு பின்வருமாறு நிகழ்த்தப்படுகின்றது. இவ்வழிபாடு காலை ஐந்து மணிக்கு ஆரம்பமாகிறது. வழிபாடு நிகழும் அன்றிரவு பட்டியின் உரிமையாளர், அங்கு வேலை செய்யும் ஆண்கள் அனைவரும் பட்டிக்குச்சென்று வழிபாட்டிற் கான தயார்ப்படுத்தலைச் செய்கின்றனர்.

அன்றையநாள் பட்டியினைச் சுத்தம்செய்து அவ்விடத்தில் அத்திமரக்கம்பு வெட்டி நாட்டுகின்றனர். அதன்கீழ் சிறுமடை வைக்கி ன் றனர். பின்னர் புதிய மண்பானையில் முதன்முதலாய்க் கன்று ஈன்ற பசுவின் பாலினைக் கொண்டு பொங்கல் வைத்து, அதனைப் படைத்துப் பூசை செய்கின்றனர். இப்பூசையினை அக்குடும்பத்திலுள்ள பெரியவர் அல்லது ஊரிலுள்ள பெரியவர் செய்கின்றார். இவர் அருள்வயப்பட்ட நிலையில் வதனமார் தோற்றப்பாடல், ஊர்சுற்றுக் காவியம் போன்ற பாடல்களை உடுக்கடித்துப்பாடி வழிபாடு செய்கின்றார். பொங்கல் வைத்தல், வழிபாடு ஆகியவற்றில் ஆண்கள் மட்டுமே பங்குபெறுகின்றனர். பட்டிகளில் படைத்து வழிபட்டவற்றைப் பெண்கள் உண்ணக்கூடாது என்னும் நம்பிக்கை இருப்பதாலும் அவற்றை வீடுகளுக்கு எடுத்துச் செல்லக்கூடாது என்னும் வழக்குள்ளதனாலும் அவற்றை அவ்விடத்திலேயே விட்டுச் செல்கின்றனர்.

## வம்மயடியூற்று முத்துமாரியம்மன் கோயிலில் நிகழ்த்தப்படும் வதனமார் சடங்கு

வெல்லாவெளியிலிருந்து உட்செல்ல நாற்பதாம் கிராமத்தினை வந்தடையலாம். இக்கிராமத்திற்குச் செல்லும் பாதை மண் பாதையாகும். பாதையின் இரு பகுதியிலும் நீரோடை ஓடுகின்றது. அங்கு பெருமரங் களும் வயல்வெளிகளும் சிறுமலைகளும் சூழ்ந்துள்ளன. இவ்வயல்ப்பகுதிகளைக் கடந்தே நாற்பதாம் கிராமத்திற்குச் செல்ல வேண்டும். நாற்பதாம் கிராமத்திலுள்ள ஒவ்வொரு வீட்டினைச் சுற்றியும் தென்னை, மா, பலா போன்ற மரங்கள் உள்ளன. அத்தோடு வீடுகளில் வீட்டுத் தோட்டம் அமைக்கப்பட்டுள்ளது. இதேபோல் கோயிலைச் சுற்றியும் முதிரை, வேம்பு, கொன்றை, வில்வம் போன்ற மரங்கள் காணப்படுகின்றன. கோயிலின் பரிபாலத் தெய்வங்களில் ஒன்றாகச் சுவாதி அம்மனும் வதனமாரும் உள்ளனர். இக்கோயில்ச் சடங்கில் கதவுதிறந்து ஐந்தாம் நாள் சடங்காக வதனமார் வழிபாடு இடம் பெறுகின்றது. இவ்வழிபாட்டில் சுவாதி அம்மன் வதனமாருக்கு அருள் வழங்குதல், வதனமார் மாடுபிடிக்கும் நிகழ்வு, வதனமார் பால்வார்க்கும் நிகழ்வு, வதனமார் காலை அடைக்க அத்திமரம் வெட்டும் நிகழ்வு ஆகியவை நிகழ்த்தப்படுகின்றன.

வதனமார் தெய்வத்திற்கான வழிபாடு ஐந்தாம்நாள் காலை ஐந்து மணியளவில் மாரியம்மன் கோயிலில் ஆரம்பிக்கின்றது. இவ்வழிபாட்டின்போது சுவாதி அம்மனுக்குப் பெண்ணொருவரும் வதனமாருக்கு ஆணொருவரும் தெய்வமாடுகின்றனர். சுவாதிஅம்மன் பந்தல்முன் சுவாதிஅம்மனுக்குத் தெய்வமாடுபவர் வதனமாருக்கு ஆசி வழங்குகின்றார். பின்னர் அனைவரும் ஊர்வலமாகப் பூசைக்குரிய பொருட்களுடன் நீரோடைக்கருகில் அமைந்துள்ள திக்கோடை பிள்ளையார் கோயிலுக்குச் செல்கின்றனர். இக்கோயிலுக்கு இடதுபுறம் வயல்வெளி காணப்படுகின்றது. அத்துடன் கோயிலினைச்சுற்றி மருதமரங்கள் உள்ளன. கோயிலுக்குப் பின்பகுதியில் சிறு மலைக்குன்று உள்ளது. குன்றின் மேலும் குன்றினைச் சுற்றியும் வதனமார் சடங்கு நிகழ்த்தப்படுகின்றது.

### வதனமார் மாடுபிடிக்கும் நிகழ்வு

இவ்வழிபாட்டுச் சூழலில் மக்கள் மலைக் குன்றினைச் சுற்றி அமர்ந்திருக்கின்றனர். முதலாவதாக குழுமாடு பிடிக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. வதனமாருக்கு தெய்வமாடுபவர் வெளுக் கயிற்றினைத் தோளில் போட்டுக்கொண்டு இன்னொரு கயிற்றினை மாடுபிடிக்கும் சுருக்குப்போல் பிடித்துக் கொண்டு அமர்ந்திருப்பவர்களிடையே ஓடி, மாடுகளைத் தேடுவதுபோல் பாவனை செய்வார். இதன் தொடர்ச்சியாகக் கூட்டத்தில் இருக்கும் பத்து தொடக்கம் பதினைந்து வயதுக்குட்பட்ட சிறுவர்களைத் தேடி, அவர்கள் கழுத்தில் வெளுக்கயிற்றினைப் போட்டு இழுப்பதுபோல் பாவனை செய்வார். அவ்வாறு வதனமார் கயிற்றினால் சுருக்குப்போட்டு ஒரு நபரைத் தெரிவு செய்யும் பட்சத்தில் அவர் வதனமார் கயிற்றில் சிக்காமல் எழுந்து கோயிலைச்சுற்றி ஓடத்தொடங்குவார். இவ்வாறு வதனமாரும் ஒவ்வொருவராய்த் தெரிவுசெய்ய அவர்களும் தங்களை மாடுகளைப்போலப் பாவித்து எழுந்து ஓடத்தொடங்குவார்கள். எப்படியும் இருபது பேர்கள் எழுந்து ஒரு குழுவாகச் சேர்ந்து ஓடத்தொடங்குவார்கள். வதனமாரும் அவர்களை மாடுகளாகக் கயிற்றினால் சுருக்குப் போட்டுப் பிடிப்பதாகப் பாவனை செய்து, ஓடுபவர்களைத் துரத்திப்பிடித்து இழுத்து வருவார்.

இதன் தொடர்ச்சியாக மாட்டினை வண்டிலில் பூட்டும் நிகழ்வு இடம்பெறும். இதன்போது வதனமார் மாடுகளாகப் பாவித்து இழுத்து வந்தவர்களின் மீது நீர் தெளித்து, அவர்களின் கழுத்தில் பட்டுத்துணியினைக் கட்டுவார். பின் பிடித்து வந்தவர்களை இருவர் இருவராகச் சேர்த்து வண்டிலில் மாடுகளைக் கட்டுவதுபோல் பாவனை செய்வார். இந்நிகழ்வு குன்றினைச் சுற்றி இடம்பெறும். அப்போது குன்றின் மேல் மடைவைக்கப்பட்டு படையல்கள் படைக்கப்படும். இங்குப் பால், பால் பொங்கல், தயிர் போன்றவை முக்கிய படையல் பொருட்களாகப் படைக்கப்படுகின்றன. அத்தோடு அன்றைய நாள் அக்கிராம மக்கள் தங்களின் பால் உற்பத்தி முழுவதனையும் நேர்த்தியாய்ச் கோயிலுக்குச் செலுத்துகின்றனர்.

### வதனமார் பால்வார்க்கும் நிகழ்வு

மூன்றாவது நிகழ்வாகப் பால்வார்க்கும் நிகழ்வு இடம்பெறும். பால்வார்க்கும் சடங்கில் குன்றில் வைக்கப்பட்ட மடைக்குப் பூசைகள் இடம்பெற்றுப் பொங்கல் படைக்கப்படும். பின்னர் வதனமாரினை அமரச்செய்து நேர்த்திக்குக் கொண்டுவந்த பாலினை வதனமார்மீது வார்க்கின்றனர். இதுவே பால் வார்க்கும்; சடங்காகும். பாலினை நேர்த்தியாய் ஊற்றுபவர்கள் வரிசையில் நின்று பாலினை வார்க்கின்றனர். குன்றில் இருந்து வழிந்துவரும் பாலினை மக்கள் குடிக்கின்றனர். பால்வார்த்த பின்னர் வதனமாருக்குப் பூசாரி கற்பூரம்காட்டிப் பூசை செய்கின்றார். பூசை முடிந்தபின் படைக்கப்பட்டவை மக்களுக்குப் பகிர்ந்து கொடுக்கப்படுகின்றன. வதனமார், பால் பொங்கல், பழங்கள் அனைத்தையும் சேர்த்து ஒரு கலவையாகச் செய்வார். அக்கலவையை மாடுகளாய்ப் பிடிக்கப்படட்வர்களுக்கு, வேப்பங்குழையால் தடவி, நீர்தெளித்து, ஆசிர்வாதம் செய்து பொங்கல் ஊட்டுவார். பின்னர் குழந்தைகளுக்கும் ஊட்டுவார்.

### அத்திமரம் வெட்டும் நிகழ்வு

பால்வார்க்கும் சடங்கிற்குப் பிறகு அத்திமரம் வெட்டும் நிகழ்வு இடம்பெறும். அத்திமரம் வெட்ட வதனமார், அனுமாருக்குத் தெய்வமாடுபவர்கள், பூசாரி, மக்கள் (ஆண்கள், பெண்கள், சிறுவர்கள்) அனைவரும் பூசைப்பொருட்களுடன் அப்பகுதிக்குச் செல்கின்றனர். இச்சடங்கு மாட்டினை வளர்க்க காலை அடைப்பதற்குரிய மரத்தினை வெட்டும் சடங்காகும். இச்சடங்கிற்காக ஊருக்குச் சற்றுத் தள்ளியுள்ள ஒரு நீரோடைக்கருகிலுள்ள அத்திமரம் தெரிவு செய்யப்படுகின்றது. இம்மரம் உயரமானதாகவும் மெல்லிய கம்புகளைக் கொண்டதாகவும் இருக்க வேண்டும்.

காலை அடைக்கத்; தெரிவுசெய்யப்பட்ட மரத்தினடியில் மடை வைக்கப்படுகின்றது. மடையில் பசும்பாலும் பசும்பால்ப் பொங்கலும் படைக்கப்படுகின்றன. இதன் போது வீடுகளில் விளைந்த வெண்டிக்காய், பயிற்றங்காய், வாழைக்காய், பச்சைச்சோழன் போன்றவற்றையும் படைக்கின்றனர். பின்னர் பூசை செய்கின்றனர். அதன் பின்னர் மரம் வெட்டப்படுகின்றது. இதன்போது தலைமைப் பூசாரி மந்திர உச்சாடனம் செய்து மரத்தின் ஏதாவது கிளையில் ஒரு வெட்டினை வெட்டுகின்றார். அப்போது அவர் திடீரென தூக்கி எறியப்படுகின்றார். மரத்தில் ஒரு வெட்டு வெட்டும்போது அம்மரத்தினுள்;ள சக்தி வந்து தாக்குவதால் தூக்கியெறியப் படுவதாக நம்பப்படுகின்றது. பின்னர் அனுமாருக்குத் தெய்வமாடுபவர் ஒரு வெட்டினை வெட்டுகின்றார். பிறகு அம்மரக்கிளையினை வதனமார் வெட்டி, கீழே வீழ்த்துகின்றார்.

இதன்பின்னர் அங்கு படைக்கப்பட்ட பயிற்றங்காய்,வெண்டிக்காய், பச்சைச்சோழன் போன்றவை அனைவருக்கும் பகிர்ந்தளிக்கப் படுகின்றன. பின்னர் வதனமாருக்கு தெய்வ மாடுபவர் இரண்டு ஆண்களைத் தெரிவு செய்கின்றார். இவ்வாறு தெரிவுசெய்யப் பட்டவர்கள் தங்களின் வாயில் துணி யினைக்கட்டி, வெட்டிய அத்திமரத்தினைத் தூக்கித் தோளில் வைத்துக் கோயிலுக்கு எடுத்துச்செல்கின்றனர். இவ்வாறு மரத்தினைத் தூக்கி வரும்போது அது தூக்கமுடியாத பாரமாய் இருப்பதாகவும் உடலை யாரோ அமுத்துவதுபோல் இருந்ததாகவும் கூறுகின்றனர். மேலும் அவர்கள் அருள் வயப்பட்டநிலையில் அம்மரத்தினைத் தூக்கி வருகின்றனர். இந்நிகழ்விற்குப் பிறகு இவர்களுக்கு காய்ச்சல் வரும் என்ற நம்பிக்கையும் காணப் படுகின்றது. அத்திமரம் ஊர்வலமாகக் கோயிலுக்கு எடுத்துவரப்பட்டு அது சுவாதி அம்மன் பந்தல் முன் நடப்படுகின்றது. அத்திமரத்தின் இலை புனிதமாகப் பார்க்கப் படுகின்றது. அதனால்; அதன் இலைகளை வீடுகளுக்கு எடுத்துச்சென்று வழிபடுகின்ற னர். இத்துடன் இவ்வழிபாடு நிறைவு பெறுகின்றது. வதனமார் வழிபாடு நிறைவு பெற்ற பின்னர் வழக்கம்போல் மாரியம் மனுக்குரிய வழிபாடுகள் ஆரம்பமாகின்றன.

## கதிரவெளியில் நிகழ்த்தப்படும் வதனமார் சடங்கு

கதிரவெளி மடடக்களப்பிலுள்ள வாகரைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியாகும். இது தெற்கே கணுகாமடுக கிராமத்தினையும் வடக்கே வெருகலாற்றினையும் எல்லை களாகக் கொண்டுள்ளது. வரலாற்று ஆய்வாளர்கள் கதிரவெளியில் சிற்றரசுகளின் ஆட்சி நிலவியதாகக் கூறுகின்றனர். அதற்கு அத்தாட்சியாகப் படிவெட்டிய மலையில் காணப்படும் இடிபாடு அடைந்துள்ள செங்கற்கோட்டை, இலந்தை மேடு என்னும் இடத்தில் காணப்படும் கற்த்தூண்கள், கல்லரிப்பு என்னும் இடத்தில் உள்ள கட்டிட இடிபாடுகள் இவற்றைக்கொண்டு சிற்றரசுகள் ஆட்சிசெய்த பழமையான பிரதேசமாக இதனை அனுமானிக்கின்றனர்.

இங்கு வாழும் மக்கள் 1990களிலிருந்து இலங்கையில் ஏற்பட்ட யுத்தத்தினாலும் 2004இல் ஏற்பட்ட சுனாமியினாலும் முற்றாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இம்மக்கள் விவசாயத்தினை அடிப்படை வாழ்வாதார மாகக் கொண்டுள்ளதுடன் மீன்பிடியிலும் ஈடுபட்டுவருகின்றனர். இத்தொழில்களைத் தவிர தேனெடுத்தல், வேட்டையாடல் என்பனவற்றோடு காடுகளுக்குச் சென்று பலாப்பழம், நாவற்பழம், வீரப்பழம் போன்றவற்றைப் பறித்து விற்கும் தொழில்களிலும் ஈடுபடுகின்றனர்.

இவ்வூரில் நாகதம்பிரான், கண்ணகையம்மன், மாரியம்மன், பிள்ளையார் போன்ற தெய்வங்களுக்குக் கோயில்களுள்ளன. இதில் மாரியம்மன் வருடாந்தச்சடங்கின் ஒரு பகுதியாக வதனமார் வழிபாடு இடம் பெறுகின்றது. இங்கு நடைபெறும் வதனமார் வழிபாடு வைகாசிமாத வளர்பிறையை யொட்டி வருகின்ற முதல்வெள்ளிக்கிழமை ஆரம்பித்து மூன்று நாள் நடைபெறுகின்றது. இவ்வழிபாட்டில் 'பெட்டகம் எடுத்தல்' (புனிதப்பொருட்கள் உள்ள பெட்டகம் பூசாரியின் வீட்டிலிருந்து எடுத்து வரப்படல்), 'குழுமாடு பிடிக்கக்காட்டிற்குச் செல்லல்', 'கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு', 'பச்சைப்பெட்டி எடுத்துவரல்', 'இராசக்கால் வெட்டும் நிகழ்வு', 'மாடுகளை வில்லைகளில் கட்டும் நிகழ்வு' போன்றவை இடம் பெறுகின்றன. இவற்றில் ஆண்களே அதிகம் பங்கெடுக்கின்றனர். இவ்வழிபாட்டின் தொடக்கமான வதனமார் சுவாதி அம்மனிடம் ஆசி பெறுதல் நிகழ்வு கோயிலிலும் ஏனையநிகழ்வுகள் அனைத்தும் காட்டிலும் நிகழ்த்தப் படுகின்றன.

## பெட்டகம் எடுக்கும் நிகழ்வு

மாரியம்மன் கோயில் முன்றலில் மக்கள் இணைகின்றனர். அங்கு மடைவைத்துப் பூசாரி தெய்வமாடிச் சுவாதி அம்மனை

வழிபடுகின்றார். இதனைச் சுவாதி அம்மனிடம் ஆசிபெறல் என்கின்றனர். இதன் பின்னர் பெட்டகம் எடுத்தல் நிகழ்வு நடைபெறுகின்றது. மரத்தினால் செய்யப் பட்ட ஒரு பெட்டகத்தில் வெளுக்கயிறு, பச்சை, மஞ்சள், சிவப்பு ஆகிய நிறங்கள் கொண்ட பட்டுத்துணிகள், திருமாலின் சிலை ஆகியவை உள்ளன. இப்பெட்டகம் பூசாரியின் வீட்டில் பாதுகாப்பாய் வைக்கப்பட்டிருக்கும். இந்நிகழ்வின்போது கோயிலிருந்து பறை ஒலியுடன் அனைவரும் பூசாரியின் வீட்டிற்குச் செல்கின்றனர். அங்கிருந்து பெட்டகம் கோயிலுக்கு எடுத்து வரப்படுகின்றது. பின்னர் கோயிலின் வெளிமுன்றலில் பந்தல் அமைக்கப்பட்டு அங்கு அப்பெட்டகத்தினை வைத்துப் பூசை செய்கின்றனர். அப்போது சுவாதி அம்மனுக் குத் தெய்வமாடுபவர் வதனமாருக்குத் தெய்வமாடுபவர்களை ஆசிர்வதித்துச் சடங்கு செய்வதற்கு ஒப்புதல் அளிக்கின்றார். பின்னர் பூசாரி பதினைந்து வயதிற்கு மேற்பட்ட பன்னிரெண்டு ஆண்களைத் தெரிவுசெய்து அவர்களில் மூத்தவரைத் தலைவராக்கிக் குழுமாடு பிடித்துவரும்படிக் கூறுகின்றார். தெரிவுசெய்யப்பட்ட பன்னி ரெண்டு ஆண்களையும் 'இளந்தாரிகள்' என அழைக்கின்றனர்.

வதனமாருக்குத் தெய்வமாடுபவர் எத்திசையி னால் சென்றால் மாடு கிடைக்கும் எனக் கட்டுச்சொல்லி ஆசி வழங்குகின்றார். அத்துடன் மாடுகளை எப்படிப்பிடிக்க வேண்டுமென அறிவுரையும் வழங்குகின்றார். மாடுபிடிக்கச் செல்லும் இளந்தாரிகளுக்குப் பாம்பு தீண்டாமல் இருக்க, விலங்குகளால் கேடுவிளையாமல் இருக்க, நோய்கள் பரவாமல் இருக்கச் சில செயல்முறைகளைச் செய்கின்றார். அதாவது, சிவப்பு, மஞ்சள் துணி;களை ஒன்றாய்த் திரித்தெடுத்து இளந்தாரிகளுக்குப் பூணூல்போல் போட்டு காட்டுக்குள் அனுப்புகின்றார்கள்;. பன்னி ரெண்டு பேர்களுடன் அவ்வூரைச் சேர்ந்த பிற ஆண்களும் விரும்பிச் செல்கின்றனர். இவர்களை வெள்ளைகட்டி, பறைமேளம் வாசித்துக் காட்டின் தொடக்கம்வரை சென்று வழியனுப்புகின்றனர். அவ்வாறு செல்பவர்கள் அருள்வயப்பட்டநிலையில் ஆடிச்செல்கின்றனர். காடுகளுக்குச் செல்லும் போது பறை, உடுக்கை போன்றவை வாசிக்கப்படுவதுடன் குழுமாட்டுக்காவியம், யானை கட்டு அகவல் போன்றவையும் பாடப்படுகின்றன. இவ்வாறு குழுமாடு பிடிக்கச் செல்பவர்கள் அன்றிரவு முழுவதும் காட்டிலேயே தங்கி, மாடுகளைப் பிடித்து வருகின்றனர்.

### கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு

மாடுபிடிக்கச் சென்றவர் ஆபத்தில்லாமல் திரும்பிவரப் பெட்டகம் இருக்குமிடத்தில் பூசாரியார் மடைவைத்துச் சில வழிபாடு களைச் செய்கின்றரர். இது சுவாதி அம்மனுக் கான வழிபாடாக அமைகின்றது. இதன் போது சுவாதி அம்மனுக்கு கன்னிக்கால் வெட்டும் நிகழ்வு இடம்பெறுகின்றது. கன்னிக்காலாகச் செங்கரும்பு வெட்டப் படுகின்றது. இதற்காக நீண்டு வளர்ந்த செங்கரும்பு தெரிவு செய்யப்படுகின்றது. அச் செங்கரும்பானது வீடுகளின் பின்பகுதியில் வளர்க்கப்படுகின்றது. அவ்விடத்தினைத் துப்பரவாக வைக்கின்றனர். அத்துடன் அவ்விடத்தில் அசைவ உணவு உண்பவர்கள், தீட்டுள்ளவர்கள் செல்வதனைத் தவிர்க்கின் றனர். ஏனெனில் இக்கரும்பு எல்லா வீடுகளிலும் வளராது. சுத்தமாக இருக்கும் வீடுகளில் மட்டுமே வளரும் என்னும் கருத்து அம்மக்களிடையேயுள்ளது. இந்நிகழ் விற்காகச் செங்கரும்பில் நன்றாக முற்றிய நீண்ட கரும்பு தெரிவு செய்யப்படுகின்றது. கரும்பு தெரிவுசெய்யப்பட்ட வீட்டிற்குப் பூசாரி, மக்கள் அனைவரும் வெள்ளைப் பிடித்துப் பறை ஒலியுடன் சென்று செங்கரும்பிற்குப் பூசைசெய்து கரும்பினை வெட்டிப் பெட்டகம் இருக்கும் இடத்திற்குக் கொண்டுவந்து பூசை செய்கின்றனர்.

### பச்சைப்பெட்டி எடுத்துவருதல் நிகழ்வு

அடுத்தநாள் குழுமாடுபிடிக்கச் சென்றவர்கள் மாடுகளைப்பிடித்து வருகின்றனர். இம்மாடு கள் காட்டுமாடுகளாகும். (சிலவேளைகளில் வளர்ப்பு மாடுகள் மேய்ச்சலுக்காக காட்டிற் குச் செல்லும்போது விடுபட்டு, காட்டிலே தங்கி காட்டுமாடுகள் ஆவதுமுண்டு.) இம் மாடுகளைக் கோயில் முன்றலில் கட்டுகின்ற னர். இதன்பிறகு பச்சைப்பெட்டி எடுக்கும் நிகழ்வு இடம்பெறுகின்றது. குழுமாடு பிடித்து வந்த இளந்தாரிகளுக்குச் சமைத்துப்பரிமாறு தல் இந்நிகழ்வின் நோக்கமாகும். இதன் பொருட்டு சமைப்பதற்கான மரக்கறிகளை எடுத்துவருதல் பச்சைப்பெட்டி எடுத்துவருதல் எனப்படுகின்றது. முன்னதாக ஏழுவகையான காய்வகைகளை (பயிற்றங்காய், கத்தரிக்காய், வாழைக்காய், சுரைக்காய், அவரைக்காய், புடலங்காய், பூசனிக்காய்) வாங்கி அருகிலு ள்ள வீரகத்தி பிள்ளையார் ஆலயத்தில் வைக்கின்றனர். இந்நிகழ்வின்போது ஏழு வகை மரக்கறிகளையும் பிள்ளையார் ஆலயத்தில் இருந்து வெள்ளை பிடித்து பெட்டகம் இருக்கும் இடத்திற்குக்

கொண்டுவருகின்றனர். பின்னர் அவற்றைப் புதிய மண்பானையில் சமைத்துச் சுவாதி அம்மனுக்குப் படையல் செய்து பூசை செய்கின்றனர். (ஏழு காய்கறிவகைகளையும் ஒரே பானையில் இட்டு உப்புப்போடாமல் சமைக்கின்றனர். இதனை 'அமுது' எனக் கூறுகின்றனர்.) பின்னர் அதனை இளந்தாரி களுக்குப் படைக்கின்றனர். இச்சடங்கில் ஆண்கள் மட்டுமே பங்குபெறுகின்றனர். இப்படையலை ஆண்களைத்தவிர ஏனையவர் கள் உண்பதில்லை; அத்துடன் அதனை வீடுகளுக்கும் எடுத்துச் செல்லக்கூடாது என்னும் வழக்குள்ளது.

### இராசக்கால் வெட்டும் சடங்கு

ஏனைய சடங்குகள் காட்டிலுள்ள மூன்று வில்லைகள்;(மாடு கட்டுவதற்காய் நடப்பட்ட மரக் குற்றி) அமைந்துள்ள இடத்தில் நிகழ்த்தப் படுகின்றன. இவ்வூரிலுள்ள காட்டின் முன்பகுதியில் அவ்வில்லைகள் காணப்படுகின்றன. இந்நிகழ்விற்காய் அவ் விடம் சுத்தம் செய்யப்படுகின்றது. இவ் வில்லைகளுள்ள பகுதியில் இரண்டு கூடார ங்கள் அமைக்கப்படுகின்றன. இதற்கு இளந்தாரிகள் உதவி செய்கின்றனர். இதில் ஒரு கூடாரம் பொதுமக்கள் வந்து சடங்கு பார்ப்பதற்காக அமைக்கப்படுகின்றது. மற்றைய கூடாரத்தினைப் போடிமார் கூடாரம் என அழைக்கின்றனர்.

இக் கூடாரங்கள் அமைப்பதற்கான கம்புகள் நடப்பட்டுள்ளன. இவை பதினைந்தடி நீளம் கொண்டதாகவும் முழுவதுமாக சேலையால் அடைக்கப்பட்டதாகவும் உள்ளன. கூடாரம் அமைக்கும்போது கூரை வேய்வதற்காகக் கீழிருந்து சீலை எறியப்படுகின்றது. இதனைச் 'சீலை ஓதிஎறிதல்' எனக் கூறுகின்றனர். இதன்போது பூசாரி சுவாதி அம்மனை நினைத்து, முதல் சீலையைப் பந்தலின்மீது போடுதலையே சீலை ஓதிஎறிதல் என அழைக்கின்றனர். இக்கூடாரம் அமைக்கப்பட்ட பின்னர் கோயிலில் செய்யப்பட்ட சடங்குகள் இக்கூடாரத்திற்கு மாற்றப்படுகின்றன. அதனால் கோயில் முன்றலிலிருந்து பெட்டகம், பூசைப் பொருட்கள் போன்றவை இக்கூடாரப் பகுதிக்குக் கொண்டு வரப்படுகின்றன. அப்போது பெட்டகத்துடன் மக்கள் ஊர்வல மாய் அருள்வயப்பட்டு ஆடிவருகின்றனர்.

இதன் பின்னர் அடுத்தநாள் இரவில் இராசக்கால் வெட்டும் சடங்கு நிகழ்த்தப் படுகின்றது. இச்சடங்கு மழைவேண்டியும், கால்நடை விருத்திஅடையவும், நோய்த் தொற்றுக்கள் ஏற்படாமல் இருக்கவும் செய்யப்படுகின்றது. இச்சடங்கிற்காய் அக் காட்டுப்பகுதியில் காணப்படும் ஒரு பூவரசுமரம் தெரிவு செய்யப்படுகின்றது. பின்னர் அம்மரத்திற்கு மடைவைத்து மந்திர உச்சாடனம் செய்கின்றனர். பின் அந்த மரத்தினை வெட்டி வந்து பூசை செய்கின்றனர். இம்மரத்திரனை ஒரே வெட்டில் வெட்ட வேண்டும் என்ற நம்பிக்கை நிலவுகின்றது. மரம் வெட்டப் பட்டு வெள்ளைத்துணியினால் சுற்றப்பட்டுத் தீப்பந்தங்களுடன் பறை ஒலி ஓசையுடன் அவ்விடத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. இதன்போது மக்கள் அனைவரும் உருக் கொண்டு ஆடுகின்றனர். வெட்டப் பட்ட மரம் பெட்டகம் இருக்கும் போடியார் கூடாரத்தில் நடப்படுகின்றது. பின்னர் பூசை இடம்பெற்று அன்றைய நாள் சடங்கு நிறைவுபெறுகின்றது.

### மாடுகளை வில்லைகளில் கட்டும் சடங்கு

அடுத்தநாள் காலை வில்லையில் மாடு கட்டும் நிகழ்வு இடம்பெறுகின்றது. வில்லை யில் மூன்று மடைகள் வைக்கப்படுகின்றன. பிரதான மடை வதனமாருக்கும் இரண்டா வது மடை இளந்தாரிகளுக்கும் மூன்றாவது மடை கட்டாடிக்கும் வைக்கப்படுகின்றன. பின் இளந்தாரிகளால் பிடித்துவரப்பட்ட மாடுகளை மஞ்சள் தெளித்துக் குளிப்பாட்டி வில்லையில் கட்டுகின்றனர். அப்போது அவ்வூரைச் சேர்ந்த சிலர் அவ்வாறு மாட்டினை வில்லையில் கட்டவிடாமல் தங்களின் மந்திர தந்திரங்களால் தடுக்கின்ற னர். அவர்கள் மாடுகளை விரண்டோடச் செய்தல், மாட்டினை எழுந்து நடக்க இயலாமல்; செய்தல் போன்ற மந்திர விளையாட்டுக்களைச் செய்கின்றனர். ஆனால் பூசாரி தன் மந்திர ஆற்றலால் இச்சவால் களை எதிர்கொண்டு மாடுகளை வில்லை களில் கட்டுகின்றார். இதன்பிறகு பூசை இடம்பெறுகின்றது. அவ்வேளை பலர் அருள்வயப்பட்டு மாடுகளுடன் துள்ளிக் குதித்து ஆடுகின்றனர். பின்னர் பூசாரி மாடுகளின் ஒரு காதையறுத்துப் பலி கொடுக்கின்றார். இந்நிகழ்விற்குப் பின்னர் பூசாரி ஆற்றுக்குச் சென்று நீராடி வருகின்றார். இறுதியில் பூசை இடம் பெறுகின்றது. இப்பூசையின்போது அனை வரும் மங்களம் பாடி வில்லைகளின் மீது பூப்போடுகின்றனர். இத்துடன் இவ்வழிபாடு நிறைவடைகின்றது.

### முடிவுரை

இலங்கையில் கிழக்கு மாகாணத்தில் நிலவும் வதனமார் வழிபாடு குறித்த

ஈழத்துப்பூராடனாரின் வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு என்னும் நூலையும்; சமகாலத்தில் வம்மடியூற்று, கதிரவெளி போன்ற இடங்களில் மேற்கொண்ட கள ஆய்வுத்தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டு இக்கட்டுரை எழுதப்பட்டுள்ளது.

ஈழத்துப்பூராடனார் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ள கதைகளிலிருந்து ஒரு சமூகத்தினர் கூட்டமாய்ப்பயணம் செய்து தம்பலகாமம், கதிரவெளி, நாதனை போன்ற பகுதிகளில் தங்கி நிலையாக வாழத்தொடங்கியதற்கான குறிப்புக்களைக் காணமுடிகின்றது. வதனமார்கள் ஒரு குழுவாகப்பயணம் செய்து வந்தவர்கள் என வதனமார் ஊர்சுற்றுக் காவியம் குறிப்பிடுகின்றது. இவர்கள் சில பகுதிகளில் தங்கி, மாடுகளைப்பிடித்தும் தேனெடுத்தும் தொடர்ந்து பயணம் செய்துள்ளனர். சில பகுதிகளில் நிலையாக வாழ்கின்றனர். இவர்களின் தொழில் குழுமாடுகளைப் பிடித்துக் கால்நடைகளாகப் பழக்குதலாகும். மாடுகளைப்பிடித்துப் பழக்கும் ஓர் இனக் குழுவாக வதனமார்கள் இருந்துள்ளனர். வதனமார் தொடர்பான கதைகளும் சடங்குகளும் அவர்களைப் பன்மைத்தன்மையிலேயே குறிப்பிடுகின்றன. அத்துடன் வன விலங்குகள் எங்கிருக்கின்றன என்பதனைத் தெரிவித்தல், ஆயுதங்களைத் தயார்படுத்தல் எனஒவ்வொரு வதனமாரும் ஒரு பொறுப்பினை வகிப்பவராகக் காணப்பட்டுள்ளார். எனவே வதனமார் ஒரு கூட்டமாக வந்து பரவிய குழுவினராக அனுமானிக்கலாம். இவர்கள் பின்னர் படிப்படியாகக் கால்நடை வளர்ப்புச் சமூகமாய் மாற்றம் பெற்றுள்ளனர். இச்சமூகத்தினரின் சமூகப் பரவலை வழக்காறுகள், வழிபாடுகள் போன்றவை மூலமாக அறியமுடிகின்றது. ஓரிடத்தில் இருந்து வந்து தங்கிப் பின்னர் மெல்ல மெல்லச் சிறுகுழுக்களாய்ப் பரவிய தன்மூலம், ஓர் இனக்குழுச் சமூகமாய் வதனமார்கள் வாழ்ந்திருக்க வாய்ப்புக்களுள்ளன.

இருப்பினும் இன்றைய சமூகச் சூழலில் மட்டக்களப்பில் போடிக்காரர், பட்டிக்காரர் போன்றோரின் வாழ்வியல் முறைகளைக் காண்பது அரிதாகவே உள்ளது. சமகாலத்தில் பட்டிக்காரர்களின் இருப்பு குறித்த எந்தப் பதிவுகளும் குறிப்புகளும் இல்லை. அவர்கள் எந்தச் சமூகமாக மாறியுள்ளனர் என்பதனையும் தெளிவாக அறிய முடியவில்லை. தற்போது பட்டிகளைப் பராமரிப்பவர்களைப் பட்டிக்காரர்களாகக் கருத முடியவில்லை. ஆனால் பலர் பட்டிகளைப் பாதுகாத்தலைத் தொழிலாகச் செய்கின்றனர். இவர்கள் தனித்த குழுவாக இல்லாமல் வெவ்வேறு சமூகங்களைச் சேர்ந்தவராகவும் இருக்கின்றனர். அத்துடன் இவர்கள் கால் நடை உரிமையாளர்களாகவும் நிலச்சொந்தக் காரர்களாகவுமுள்ளனர். இவர்களது குடும்பங்கள் குடியிருப்புப் பகுதிகளில் வசிக்கின்றனர். இவர்கள் தங்கள் கால் நடையுடன் ஏனையவர்களுடைய கால்நடைகளையும் பாதுகாக்கின்றனர். இதற்கான ஊதியத்தைப் பணமாகப் பெற்றுக் கொள்கின்றனர். அதேவேளையில் அவர்கள் தங்களைப் பட்டிக்காரர்கள் என அடையாளப் படுத்திக் கொள்வதில்லை. அதனால் பட்டிக்காரர்களைத் தனித்த சமூகமாய் இனங்காண்பது இயலாமலுள்ளது. அவர்கள் தனித்தச் சமூகமாக இல்லாமல் பிற சமூகத்தினருடன் கலந்திருக்கலாம். இம்மாற்றம் விவசாய வாழ்வியல் முறையில் ஏற்பட்ட மாற்றங்களினாலும் போரினால் ஏற்பட்ட இடப்பெயர்வுகளினாலும் நிகழ்ந்திருக்கலாம். இத்தகைய மாற்றங்களால் பட்டிக்காரர்கள் சாதாரண வாழ்வியலுக்குள் தங்களை உட்படுத்திருக்கலாம்.

சமகாலத்தில் வதனமார் வழிபாடு பட்டிகளிலும் கோயில்களிலும் நடைபெறுகின்றன. இதனை வெல்லாவெளி, தாந்தாமலை, அக்கரைப்பற்று போன்ற பகுதிகளிலுள்ள பட்டிகளில் உரிமையாளர்கள், பட்டிகளைப் பராமரிப்பவர்கள் இணைந்து ஒருநாள் வழிபாடாக நிகழ்த்துகின்றனர். இங்கு அத்திமரம் வெட்டி நட்டு அதன் கீழ் பால்ப்பொங்கல் படைத்து வதனமார் பாடல்களை உடுக்கடித்துப்பாடி வழிபடுகின்றனர். இதன்போது பட்டிகள் பெருகவும் நோய்த்தொற்றுக்கள் ஏற்படாமல் காக்கும் படியும் வேண்டுகின்றனர். அத்துடன் இவ்வழிபாட்டில் ஆண்களே பங்குபெற்றுகின்றனர்.

இவற்றைத்தவிர வதனமார் வழிபாடு வம்மடியூற்று, கதிரவெளியிலுள்ள மாரியம்மன் கோயில்களில் நிகழ்த்தப்படுகின்றன. இவ்வழிபாட்டினை மேற்கொள்ளும் மக்கள்; விவசாய சமூகத்தினராவார். வம்மடியூற்றில் மாரியம்மன் கோயில்ச் சடங்கின் ஒரு பகுதியாக நிகழும் வதனமார் வழிபாடு அங்குள்ள பிள்ளையார் கோயிலுக்கு வழிபாட்டிற்கான பொருட்களை எடுத்துச் செல்வதுடன் ஆரம்பமாகின்றது. பின்னர் அங்கு மாடுகளைப் பிடித்துக்கட்டுதல், ஏரில் பூட்டுதல், வதனமாருக்குப் பால்வார்த்தல் போன்றவை போலச்செய்தலாக நிகழ்த்தப் படுகின்றன. அடுத்ததாக மாடுகளை

வளர்க்கக் காலையடைத்தல் என்னும் நிகழ்வு அவ்வூரிலுள்ள விவசாய நிலத்தில் அமைந்துள்ள நீரோடைக்கருகிலுள்ள அத்திமரத்தடியில் இடம்பெறுகின்றது. பின் மீண்டும் மாரியம்மன் கோயிலில் வழிபாடு நிறைவடைகின்றது. கதிரவெளியில் இடம் பெறும் வழிபாடு மாடுகளைப் பிடிக்கக் காட்டிற்குச் செல்வதுடன் தொடங்குகின்றது. இந்நிகழ்வில் பங்குபெறுபவர்கள் காட்டிற்குச் சென்று, அங்குத்; தங்கியிருந்து காட்டு மாடுகளைப் பிடித்துவருகின்றனர். பின்னர்; காட்டின் தொடக்கப்பகுதியிலுள்ள வில்லை களில் மாடுகளைக்கட்டி, அவற்றிற்குப் பூசை இடம்பெறுவதோடு வழிபாடு நிறைவடை கின்றது. இந்நிகழ்வில் காட்டுமாடுகளை அடக்கி அவற்றைப் பட்டிமாடுகளாக மாற்றுவதைச் சடங்காக நிகழ்த்துகின்றனர். வழிபாட்டின் பிரதான நிகழ்வுகள் ஊரின் எல்லையிலுள்ள காட்டிலும் காட்டின் தொடக்கப் பகுதிகளிலுமே நடைபெறுகின் றன. இங்கு நடைபெறும் வதனமார் வழிபாடு பட்டியின் பெருக்கத்தையும் காட்டுமாடுகளை வளர்ப்பு மாடுகளாக மாற்றுவதையும் நோக்காகக் கொண்டுள்ளது. அத்துடன் ஏற்கனவே வாழ்ந்த ஒரு சமூகத்தின் தொழில் சார்ந்த வாழ்வியல் முறைச் சடங்குகளாக நிகழ்த்துவதை அவதானிக்கலாம்.

வதனமார் வழிபாடு பட்டிகளில் பட்டிக்குரிய தெய்வமாகவும் வம்மடியூற்றில் மாரியம்மன் வழிபாட்டில் ஒரு பகுதியாகவும் கதிரவெளியில் தனித்த வழிபாடாகவும் நடைபெறுகின்றது. பட்டிவைத்திருப்போர் பட்டி வைக்காமல் விவசாயத்தை மேற் கொள்வோர் என அனைவரும் வதனமாரை வழிபடுகின்றனர். இலங்கையில் வாழ்ந்த மேய்ச்சல் சமூகத்தினரான பட்டிக்காரர்கள் காலப்போக்கில் சமூக, அரசியல், பொருளா தாரக் காரணிகளால் இடம்பெயர்ந்திருக் கலாம் அல்லது காணாமல் போயிருக்கலாம் அல்லது அவர்கள் பொதுச்சமூக வெளிக்குள் இரண்டறக் கலந்திருக்கலாம். பின்னர் போடிமார் தங்கள் விவசாய வாழ்க்கையை மீளக்கொண்டுவரும்போது அவர்கள் இப் பட்டிகளைப் பராமரிப்பதற்குப் பட்டிக் காரர்களில் எஞ்சியவர்களையோ அல்லது பிற சமூகத்தைச் சார்ந்தவர்களை நியமதித் திருக்கலாம். இப்புதிய சூழலில் வதனமார் வழிபாடு; முக்கிய இடம்பெறுகின்றது.

அதாவது பட்டிக்காரர்களிடம் மட்டும் நிலவிய இவ்வழிபாடு விவசாய சமூகத்தின் வழிபாடாகப் பரிணமிக்கின்றது எனலாம். எனவே இங்கு வாழ்ந்த ஒரு மேய்ச்சல் சமூக வாழ்வியலைக் கொண்ட பழங்குடியினரின் வாழ்வியலின் ஒரு பகுதியாக நிலவிய வதனமார் வழிபாடு சமகாலத்தில் ஒரு பொதுவழிபாடாக விளங்குவதாக அனுமானிக்கலாம்.

## உசாத்துணை நூல்கள்

1. ஈழத்துப்பூராடனார். 2000. வதனமார் வழிபாடு ஒரு மதிப்பீடு. கனடா: கனடிய ஜீவா பதிப்பகம், நிழல் வெளியீடு.
2. நந்தகுமார் வர்ணராவ். 2015. கதிரவெளிப்பிரதேசத்தின் வதனமார் சடங்கும் அதன் ஆற்றுகைசார் அம்சங் களும். மட்டக்களப்பு: நடன நாடகத் துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகம். (நுண்கலைமாணி ஆய்விற்காய்சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வேடு.)
3. பரமசிவன், தொ. 2012. தெய்வங்களும் பண்பாட்டு அசைவுகளும். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு.
4. லூர்து, தே. 2004. சாதிகளின் இடப்பெயர்ச்சிக் கதைகள் சனங்களும் வரலாறும், பிலவேந்திரன். சு. (பதிப்பு), வல்லினம், பக்: 100-114.
5. முத்தையா, இ. 2010. அடித்தள மக்களின் குறியீட்டுப் பயணவெளிகள். சென்னை: நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு.
6. சபாபதி,அ. 2012. மாரியம்மன் மான்மியம் (தாமரைக்கேணி மட்டக்களப்பு). கனடா: வல்வை வரலாற்று ஆவணக்காப்பகம்.
7. கந்தையா, வீ.சி. 1964. மட்டக்களப்புத் தமிழகம். யாழ்ப்பாணம்: ஈழகேசரிப் பொன்னையா நினைவு மன்றம்.
8. தருமராஜன், டி.2002. சனங்களின் சாமிகள்.பாளையங்கோட்டை: நாட்டார் வழக்காற்றியல் ஆய்வு மையம்.
9. போரதீவுப்பற்று வரலாற்று முக்கிய பதிவுகள்https://www.battinews. com/ 2017/08/blog-post_134.html?m=1
10. வதனமார் வரலாறும் சடங்குகளும், http://arayampathy.lk/muthusom/46-1914 2015 , 11.11.2023
11. வதனமார் வழிபாட்டின் ஓர் அங்கமாய் சம்பூரில் வன்னித்தம்பிராṅன் வழிபாடு, https://www.tamilarul. net/2019/ 08/22_ 86.html, 11.11.2023 11.11.2023 ஆகஸ்ட் 22,2019.